**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.173/2013**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : உலகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஏகாம்பர முதலி | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**09.01.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. 1, 2 பிரதிவாதிகள், 3 முதல் 8 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். 3 முதல் 8 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்க்க என்ன அவசியம் ஏற்பட்டது என்றால் அவர்கள் தகராறு செய்தார்கள். 3 முதல் 8 பிரதிவாதிகள் எந்த தேதியில் தகராறு செய்தார்கள் என்பதை எனது பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். ஆதியில் நடேச முதலியின் பூர்வீக சொத்து என நான் பிராதில் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் நடேச முதலியார் சொத்து என சொல்லவில்லை.

6. நடேச முதலியாருக்கு 1, 2 பிரதிவாதிகள் என்ன உறவு என்றால் எனக்கு தெரியாது. நடேச முதலியாருக்கு 3 முதல் 8 பிரதிவாதிகள் என்ன உறவு என்றால் எனக்கு தெரியாது. நடேச முதலியின் உடன் பிறந்தவர்கள் யார் என்பது தெரியுமா என்றால் நடேச முதலியும் தெரியாது. அவரது உடன் பிறந்தவர்களையும் தெரியாது. எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் நடேச முதலி என்ன உறவு என்று கூறியுள்ளார்கள் என்றால் தெரியவில்லை. நடேச முதலி என்ன உறவு என பத்திரத்தில் பார்த்து தெரிந்து கொண்டதாக சொல்வதில் அது என்ன ஆவணம் என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை கிரையம் வாங்கும் போது வில்லங்கம் போட்டு பார்த்தேனா

என்றால் பார்த்தேன்.

7. வழக்கு சொத்திற்கு நான் பார்த்த வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை உள்ள வில்லங்க சான்றை தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. 1966ம் வருடம் நடேச முதலியார் வகையறா ஏழுமலை முதலியாருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாதா என்றால் **(சாட்சியிடம் வா.சா.ஆ 1 ஆவணம் படிக்க கொடுக்கப்பட்டது)** இதற்கு முன்பு என் அப்பா வழக்கு நடத்தினார். எனவே எனக்கு தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் எத்தனை செண்ட் ஏழுமலைக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்பதை சொல்ல முடியுமா என்றால் **"புல எண்.95/1க்கு ஏக்கர் 0.17 செண்ட், புல எண்.96/13க்கு ஏக்கர் 0.78 செட்டில் கிழக்கு பக்கம் ஏக்கர் 0.40 செண்ட் ஆக மொத்தம் விஸ்தீரணம் ஏக்கர் 0.57 செண்ட்"** என சொல்லப்பட்டுள்ளது.

8. வா.சா.ஆ 1 ஆவணத்தை எதற்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 78 செண்ட் நிலம் எங்களுக்கு உள்ளது. அதில் அவர்கள் தகராறுக்கு வருகிறார்கள் என்பதால் இதை தாக்கல் செய்தோம். புல எண்.96/13 நாங்கள் எந்த வருடம் யாரிடமிருந்து வாங்கினோம் என்றால் 15.12.1999ல் ரங்கா ரெட்டியிடமிருந்து வாங்கினோம். நான் வாங்கிய ஆவணத்தில் புல எண்.96/13 என்ன விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளது என்றால் 78 செண்ட் காட்டப்பட்டுள்ளது. நாங்கள் கிரையம் வாங்கும்போது தாய் ஆவணத்தை ரங்கா ரெட்டியிடமிருந்து வாங்கினோமா என்றால் புகைப்பட நகல் (Xerox copy) வாங்கினோம். ரங்கா ரெட்டியிடமிருந்து வாங்கிய ஆவணத்தை படித்து தெரிந்து கொண்டோமா என்றால் தெரிந்து கொண்டோம். ரங்கா ரெட்டியிடமிருந்து வாங்கிய ஆவணத்தின் சான்றிட்ட நகல்தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 ஆவணம் என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 ஆவணத்தில் பக்கம் 2ல் பத்தாவது வரியில் **"எங்களில் 1வது நபர் 22.08.1966ம் வருடம் கிரையம் பெற்று திருத்தணி சார்ப்பதிவகத்தில் 1வது புத்தகம் 850வது வால்யும்........ 174 –176 பக்கங்களில் 1966ம் வருடம் 2961ம் பத்திர எண்ணாக பதிவு செய்யப்பட்டதும் 02.06.1974ம் வருடம் கிரையம் பெற்றும் திருத்தணி சார்பதிவகத்தில் 1வது புத்தகம் 1122 வால்யும் 317 – 319**

**பக்கங்களில் 1974ம் வருடம் 1434ம் பத்திர எண்ணாக பதிவு செய்யப்பட்டதும்"** என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பத்திர எண்.1434/1974 நான் தாக்கல் செய்ததாக சொல்லும் வில்லங்க சான்றில் உள்ளதா என்றால் இல்லை. நான் ரங்கா ரெட்டியிடமிருந்து கிரையம் வாங்கிய போது பத்திர எண்.1434/1974 வாங்கினேனா என்றால் இல்லை. நான் ஏன் பத்திர எண்.1434/1974ஐ வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை.

10. பத்திர எண்.1434/1974ஐ தற்போது காண்பித்தால் என்னால் விவரம் சொல்ல முடியுமா என்றால் தெரியாது. எனக்கு பத்திர எண்.1434/1974 ஆவணம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றாலும் பத்திர எண்.1434/1974ல் எனக்கு கிரையம் கொடுத்த ரங்கா ரெட்டிக்கு 19 செண்ட் மட்டுமே பாத்தியப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு தெரியாது. 02.06.1974ம் வருடம் பத்திர எண்.1434/1974ன் படி ஏழுமலைக்கு 19 செண்ட்டும் செஞ்சு முதலிக்கு 19 செண்டும் உள்ள விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் அதை பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றாலும் தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் அடிப்படையில்தான் 3 முதல் 8 பிரதிவாதிகளை என் தகப்பனார் இந்த வழக்கில் சேர்த்துள்ளார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டே பொய்யாக சொல்கிறேன் என்றால் தெரியாது.

11. பத்திர எண்.1434/1974ல் ஏழுமலைக்கு 19 செண்ட்டும் செஞ்சு முதலிக்கு 19 செண்டும் பாத்தியம் என தெளிவாக சொல்லியுள்ளதை மறைத்து நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த ரங்கா ரெட்டியோ அவருக்கு கிரையம் கொடுத்த ஏழுமலை முதலிக்கோ ஆதியில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய பின் எத்தனை வருடங்கள் கழித்து பட்டா வாங்கினேன் என்றால் 2 மாதங்கள் 3 மாதங்கள் கழித்து வாங்கினோம். தேதி தெரியாது. நான் வாங்கிய பட்டாவின் எண் சொல்ல முடியுமா என்றால் பட்டா எண்.646 ஆகும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)